பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் கருத்துக்கள்

சுசீந்திரி குணா

பெருந்தோட்டப்புற பாடசாலைகளில் இடைவிலகல் என்பது அதிகளவில் இடம்பெற்று கொண்டிருக்கின்ற ஒரு விடயமாக இருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருந்து விட முடியாது.

இவ்வாறு பாடசாலைகளை விட்டு இடைவிலகியோர் என்ன காரணத்தால் தமது கல்வியை இடைநிறுத்திக் கொண்டனர் என்பதை தேடியறியும் முயற்சியில் அட்டன் பகுதிக்குட்பட்ட தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலை விட்டு இடைவிலகிய மாணவர்களை சந்தித்து அவர்களிடம் ஒரு சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டோம்.

ஆரம்ப காலங்களை விட ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது மலையக தோட்டப்புற பாடசாலைகளுக்கும் ஓரளவு வசதி வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றிராமல் இல்லை என்பதோடு மக்களின் வாழ்க்கை தரமும் சற்றேனும் உயர்ந்தே காணப்படுகின்றது. அவ்வாறு இருந்த போதும் இன்றைய காலப்பகுதியிலும் பாடசாலை இடைவிலகல் கூட அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

(கருத்துக் கூறியவர்கள் தமது பெயர், இருப்பிடங்களை வெளியிட விரும்பாததால் இங்கு அவர்களின் உண்மையான பெயர்களோ இடங்களோ குறிப்பிடப்படவில்லை)

அம்மா வெளிநாடு சென்றமையாலே எனக்கு பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டது

-புஸ்பராஜ்

நான் தரம் ஆறு வரைக்கும் மிகவும் ஆர்வத்தோடுதான் படித்து வந்தேன். ஆனால் எமது குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டத்தினால் எமது தாயார் வெளிநாடு சென்று விட்டார்.

அம்மா சென்று பணம் அனுப்பியதால் எங்களின் கஷ்டம் கொஞ்சம் குறைந்தது. அம்மா வெளிநாடு சென்றமையால் எனக்கு படிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

எமது அப்பா நல்லவராகத்தான் இருந்தார். எங்களுக்கு சமைத்து தருவது, உடுப்பு துவைப்பது எல்லாமே செய்வது அவர்தான். ஆனால் நாட்கள் போக அப்பா குடிக்க ஆரம்பித்தார். குடித்து விட்டு இரவில் மிகவும் நேரம் பிந்தியே வருவார். அந்த நேரத்தில் எமது தங்கைகள் இருவரும் பசியால் அழுது தேம்பி தூங்கி போயிருப்பர்.

[illegible] வீட்டுக்கு வரும் அப்பா, 'அம்மாவை 'வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டேனே' என கவலைப்பட்டு அழத் தொடங்குவார்.

எங்களின் தூக்கமும் போய் விடும். காலையில் எழுந்திருக்க மாட்டார். இதனால் காலையிலும் வீட்டில் எதுவுமே சாப்பிடாமல் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் என்னால் பாடசாலைக்கு ஒழுங்காக போக முடியவில்லை. இருந்திருந்து பாடசாலைக்குச் சென்றாலும் அங்கும் "ஏன் பாடசாலைக்கு வருவதில்லை" எனக் கேட்டு பல நாட்கள் தண்டிக்கப்பட்டேன். வீட்டுக்கு வந்தாலும் என்னால் பாடசாலை வேலைகளை செய்ய முடியவில்லை.

காரணம் அப்பா ரொம்பவே குடிக்கத் தொடங்கி வீட்டைக் கவனிக்க அவருக்கு முடியாமல் போனது. இதன் போது அக்கம் பக்கத்தின் உதவியோடு நானே சமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவே பிறகு நிரந்தரமாக மூன்று வேளையும் நானே சமைக்க வேண்டி ஏற்பட்டது. இதன் பிறகு எப்படி என்னால் பாடசாலை போக முடியும்.

இதனால் நான் வீட்டில் இருந்து கொண்டு எமது பெரிய தங்கையை மட்டும் பாடசாலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். இப்படியே மூன்று வருடமாக என்னால் பாடசாலை போக முடியவில்லை. மூன்று வருடம் முடிய எமது அம்மா வந்த போது அவர் அனுப்பிய பணம் எதுவும் அப்பாவிடம் மீதம் இல்லை.

ஒருசில பொருட்கள் மட்டுமே அந்த பணத்தில் மிச்சமாக இருந்தது. அதன் பிறகு அம்மா வந்து என்னை பாடசாலை போகும்படி வற்புறுத்தியும் என்னால் போக முடியவில்லை. காரணம் மீண்டும் எனக்கு படிக்க வெட்கமாக இருந்தது. அதன் பிறகுதான் வேலைக்குச் சென்றேன் என்றார்.

நான் பாடசாலை செல்லாமல் போனதற்கு எனது பாடசாலையே காரணம்

-வாசுகி, வயது - 17

நான் தரம் - 9 வரை படித்தேன். நான் வகுப்பில் கெட்டிக்காரியாக இல்லை. அதனால் பாடங்களில் குறைந்த புள்ளிகளையே பெற்றேன். அதன் காரணமாக நான் மீண்டும் அதே வகுப்பில் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு தரம் நான்கில் ஒரு தடவையும், தரம் ஆறில் ஒரு தடவையும் நான் சித்தியடையவில்லை.

இதனால்தான் தரம் 8 படிக்கும் போது அந்த வகுப்பில் நானே மிக மூத்தவள். ஏற்கனவே என்னை பாடசாலைக்கு எமது பெற்றோர் ஒரு வருடம் தாமதித்தே சேர்த்திருந்தார் என்பதை குறிப்பிட வேண்டும்.

எனக்கு பாடசாலைக்கு செல்ல ஆசையும் ஆர்வமும் இருந்த போதும் எமது வகுப்பில் உள்ள ஒரு சிலரை விட குறைந்தளவு மதிப்பெண்களையே பெற்று வந்தேன். இதன் போது சில ஆசிரியர்கள் எமது வகுப்போடு எனது கல்வியையும் மதிப்பெண்ணையும் ஒப்பிட்டு நான் வெட்கப்படும் வகையில் ஏசுவார்கள். எனக்கு அவ்வாறான நேரங்களில் ரொம்ப அவமானமாக இருக்கும்.

இதன்போது வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரும் சிரிப்பார்கள். பல சமயங்களில் இதனை பயன்படுத்தி கேலியும் கிண்டலும் செய்வார்கள். அது மட்டுமன்றி பாடசாலையில் நடைபெறும் பல நிகழ்வுகளில் எனது வயதை காரணம் காட்டப்பட்டு நான் பல நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுக்கப்பட்டேன்.

இதன்போது எனக்கு மிகுந்த அவமானமாக இருக்கும். இதன் காரணமாக காலப் போக்கில் எனக்கு பாடசாலை செல்லவே பிடிக்கவில்லை. வீட்டில் நான் இனிமேல் பாடசாலை செல்ல மாட்டேன் என்று சொன்னபோது அடியும் உதையும் கிடைத்தது. பல தடவைகள் பலாத்காரமாக பாடசாலைக்கு எனது பெற்றோரால் அனுப்பி வைக்கப்பட்டேன்.

ஆயினும் பாடசாலைக்கு நான் ஒழுங்காக வருவதில்லையென அதற்கும் எனக்கு தண்டனைகள் கிடைத்தன. இதற்கு மேல் என்னால் அவமானப்பட முடியாது என திட்டவட்டமாக கூறி விட்டு "இனி எங்கும் போக சொன்னால் செத்து விடுவேன்" என்று சொன்ன பிறகு எனது பெற்றோர்களும் பேசாமல் இருந்து விட்டார்கள். நான் தற்போது ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வருகின்றேன். நான் பாடசாலை செல்லாமல் போனதற்கு காரணம் எனது பாடசாலையே.

நான் பாடசாலை விட்டு விலக நானே காரணம்

-ரவீந்திரன், வயது - 20

நான் தரம் 10 வரை படித்தேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நான் பாடசாலையை விட்டு விலகியமைக்கு நான்தான் காரணம். எனக்கு இப்போது நினைத்தாலும் கவலையாக இருக்கும். எனது பாடசாலையில் நான் ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக இருந்தேன்.

அதே போல் படிப்பிலும் ஓரளவு திறமைசாலியாகவே இருந்தேன். எனது விளையாட்டு திறமையின் காரணமாக எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அவர்களோடு பொழுதுகளை போக்குவதில் எனக்கு அதிக விருப்பமே. இவர்களோடு நான் சுற்றி திரிவேன். இதனால் எனது பாடசாலை வரவு பாதிக்கப்பட்டது.

(3ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலை.. (தொடர்ச்சி)

மேலும் வகுப்பில் பாடங்கள் இல்லாத போது நண்பர்களோடு சேர்ந்துக் கொண்டு அநாவசியமாக வேலைகளில் ஈடுபட்டதோடு பாடசாலையின் குழப்படி மாணவன் என்ற பெயர் எனக்கும் ஏற்பட்டு விட்டது. அது மட்டுமன்றி ஒரு நாள் விளையாட்டுப்போட்டி நடக்கும் போது மைதானத்தில் இரவு தங்கி வேலை செய்யும் போது எமது நண்பர்கள் சிலர் மது அருந்தியதோடு எனக்கும் கொடுத்து விட்டனர்.

இந்த விடயம் எமது அதிபருக்கு தெரிய வந்தது.

அவர் எம்மை கடுமையாக கண்டித்து எமது வீட்டாருக்கும் சொல்லிவிடவே வீட்டிலும் எனக்குத் தண்டனை கிடைத்தது. இதன் பிறகு எமது நண்பர்கள் தமக்கு பாடசாலை செல்ல அவமானமாக இருப்பதாகக் கூறி நாம் அனைவரும் நின்று விடுவோம் எனக் கூறினர். அதனை ஏற்றுக் கொண்டதால் அதன் பிறகு எமது பெற்றோர்கள் எவ்வளவு கூறியும் பாடசாலை போவதை நிறுத்தி விட்டேன்.

இதன் பிறகு எமது நண்பர்களோடு வேலைக்கு சென்ற போது ஒரு இடமும் நிரந்தரமில்லை. அத்தோடு பல தீய பழக்கங்களுக்கும் ஆளாகிவிட்டேன். என்னை விட எமது நண்பர்கள் பலர் மிக மோசமாக போய்விட்டார்கள்.

நான் இப்பொழுது மேசன் ஒருவரிடம் அன்றாட கூலிக்கு வேலை செய்து வருகின்றேன். ஆனால் எமது பாடசாலை நாட்களை நினைத்தால் எனக்கு இப்பொழுது மிகவும் மன வேதனையாக இருக்கின்றது. அன்று எமது நண்பர்கள் செய்வதுதான் சரி எனத் தெரிந்தது. ஆனால் இப்பொழுதுதான் எல்லாம் விளங்குகின்றது என்றார்.

இடை விலகியோர் பலரின் கருத்துக்கள் இவ்வாறுதான் இருந்தது. இந்த மூவரைப் பற்றி மட்டும் இங்கு குறிப்பிடக் காரணம் அனைவரின் கருத்துக்கள் இந்த மூவரின் கருத்துக்குள் அடங்கி விட்டது என்பதுதான்.

மலையக தோட்டப்புற பாடசாலைகளை பொறுத்தவரை மாணவர்களின் இடைவிலகல் என்பது மிகத் தீவிரமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்கான காரணங்களை இப்படி மேலோட்டமாக எழுதி விட்டு இவைதான் காரணங்கள் என இருந்து விட முடியாது. எனினும் இங்கு கருத்து கூறியவர்களின் அனுபவங்களை எடுத்து நோக்கும் போது மாணவர்களின் பாடசாலை இடை விலகலுக்கு வீட்டுச் சூழல் (புஸ்பராஜ்), பாடசாலைச் சூழல் (வாசுகி), சமூக சூழல் - நண்பர் வட்டாரம் (ரவீந்திரன்) என்பனவே பிரதான காரணிகளாக இருந்திருக்கின்றன என்ற உண்மையை ஓரளவு உணர்ந்து கொள்ள முடியும்.

எனினும் இது தொடர்பாக மிக உரிய கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டு, மலையகத்தின் கல்விமான்களும் நலன் கருதி செயற்படும் அமைப்புகளும் சரியான ஆய்வுகளை மேற்கொண்டு பொருத்தமான மட்டங்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மூலம் காலம் தாழ்த்தாமல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.